# அர்ப்பணம்

Transcribed from a message spoken in December, 2012 in Chennai

By *R.S. Milton*

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை நம்மைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பதில் தொடங்குகிறது. ஒவ்வொரு நாளும் நாம் நம்மையும், நம்முடைய வாழ்க்கையையும், நமக்குரியதையும் தொடர்ந்து தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை அர்ப்பணம் நிறைந்ததாக இருக்க வேண்டும்.

இன்றைக்குக் காலையில் நாமெல்லாரும் ஒரு பாடலைப் பாடினோம். அந்தப் பாடலை நீங்கள் பொறுமையாக சிந்தித்துப்பாருங்கள்.

*பலிபீடத்தில் என்னைப் பரனே!*
*படைக்கிறேனே இந்த வேளை!*
*அடியேனைச் திருச்சித்தம்போல*
*ஆண்டு நடத்திடுமே.*

இது, சில வரிகளைத்தவிர, ஓரளவுக்கு நல்ல பாடல். ஏனென்றால், இந்தப் பாடலில் *சுயம் என்னில் சாம்பலாய் மாற* என்று ஒரு வரி இருக்கிறது. சுயம் சாம்பலாய் மாறுவதில்லை; ஆனால், சுயம் ஒவ்வொரு நாளும் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று கலாத்தியர் 5ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு நம்மை ஒருநாள் அழைத்தபோது, சந்தித்தபோது, நாம் அவரை விசுவாசித்தோம், இரட்சிக்கப்பட்டோம், பாவமன்னிப்பைப் பெற்றோம், மறுபடியும் பிறந்தோம். இவைகள் உண்மை; ஆனாலும் தேவனுடைய மக்களுடைய வாழ்க்கையில் பல போராட்டங்கள் உள்ளன.

## மூன்றுவிதமான போராட்டங்கள்

மூன்றுவிதமான போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஒன்று, *தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக நம் வாழ்க்கையிலே போராட்டங்கள் உண்டு*. ஒரு காரியம் தேவனுடைய சித்தம் என்று உறுதியாகத் தெரிகிறது. அது நிறைவேறுவதற்காக நாம் வாழும்போது நம்முடைய வாழ்க்கையிலே போராட்டங்கள் உண்டு. இரண்டாவது, நாம் *நம் வாழ்க்கையைத் தேவனுக்காக அர்ப்பணிக்காததால் நம்முடைய வாழ்க்கையிலே பல போராட்டங்கள்* உண்டு. மூன்றாவது, தேவனுடைய சித்தம் என்று எண்ணிக்கொண்டு *மனித சித்தத்தை நிறைவேற்றுவதால் வருகிற போராட்டங்கள்.*

தேவனுடைய மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தேவனுக்காக அர்ப்பணிக்காததால் வருகிற போராட்டங்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம் என்று நான் நினைக்கிறேன். இதை சகோதர சகோதரிகள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும்.

தேவ மக்களுக்குப் பல போராட்டங்கள் உள்ளன. வேலைபார்க்கும் இடத்தில் போராட்டங்கள் இருக்கின்றன என்று சிலர் சொல்வார்கள். பண நெருக்கடி ஒரு போராட்டம் என்று சிலர் சொல்வார்கள். நல்ல வேலையில்லாதது ஒரு போராட்டம் என்று சிலர் சொல்வார்கள். வாழ்க்கையில் பல வசதிகள் இல்லை; காற்றோட்டமான வீடு இல்லை, சைக்கிள் இல்லை, மோட்டார் சைக்கிள் இல்லை; இவைகளைப் போராட்டங்கள் என்று வேறு சிலர் சொல்வார்கள். உடல்நலக் குறைவை ஒரு போராட்டம் என்று சொல்வார்கள்.

நான் தேவனுக்குமுன்பாகச் சற்று நிதானித்துப்பார்க்கும்போது, இந்த மூன்றுவிதமான போராட்டங்களிலே மிக அதிகமான போராட்டங்கள் நாம் நம் வாழ்க்கையைத் தேவனுக்கு அர்ப்பணிக்காததால் வருகிற போராட்டங்கள் என்று நான் நினைக்கிறேன்.

பணக்காரர்களாக வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களுக்கு வருகிற போராட்டங்களைப்பற்றி 1 தீமோத்தேயு 6ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளினாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" *(1 தீமோ. 6:9, 10)*. இதை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். "பணக்காரனாக வேண்டும்; இந்தப் பூமியில் நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும்,"

என்பதினால் வருகிற போராட்டங்கள் உள்ளன. அவைகள் தேவனுடைய சித்தம் நம் வாழ்க்கையில் நிறைவேற வேண்டும் என்பதினால் வருகிற போராட்டங்கள் அல்ல.

பல போராட்டங்கள், பல நெருக்கடிகள் அல்லது நாம் சிலுவை என்று நினைப்பவைகளுக்குப்பின் னால் நம் வாழ்க்கை தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையா என்பதுதான் கேள்வி.

## நாம் விலைக்குவாங்கப்பட்டவர்கள்

“கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தி னாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங் கள்” *(1 கொரி. 6:20)* என்றும், “கிரயத் துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்” *(1 கொரி. 7:23)* என்றும் பவுல் குறிப்பிடுகிறார். நாம் ஆண்டவராகிய இயேசுவால் விலைகொடுத்து வாங்கப்பட்டிருக்கிறோம். “...அழி வுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமற்ற மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந் திருக்கிறீர்களே” *(1 பேதுரு 1:18, 19)* என்று பேதுரு கூறுகிறார்.

எனவே, நாம் கிரயத்துக்கு, விலைக்கு, வாங்கப்பட்டிருக்கிறோம் என்ற உண்மை புதிய ஏற்பாட்டில் உள்ளது. இயேசு கிறிஸ்து நமக்குப் பாவமன்னிப்பை மட்டும் தரவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை விலையாகச் செலுத்தி நம்மை வாங்கியிருக்கிறார். அப்போஸ் தலர் 20:28யில் “...தேவன் தம்முடைய சுய-இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபை,” என்று எழுதியிருக்கிறது.

### நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தம்

எனவே, “அதனால் என்ன?” என்று நாம் கேட்கலாம். அவர் என்னை விலைகொடுத்து வாங்கியிருப் பதால் நான் எனக்குச் சொந்தமானவன் அல்ல.

ஒரு சிறிய எடுத்துக்காட்டு தருகிறேன். நாம் கடைக்குப்போய் ஒரு விலைகொடுத்து ஒரு பொருளை வாங்கினபிறகு, அந்தப் பொருள் கடைக்காரனுக்குரியதல்ல. அந்தப் பொருள் நமக்குரியது. இது மிக வும் எளிமையான உண்மை.

ஆனால், இதை நடைமுறைப்படுத்தும்போது நம் இருதயம் உடைந்துபோகும். நாம் நமக்குரிய வர்கள் அல்ல. நாம் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குரியவர்கள், நாம் அவருக்குச் சொந்த மானவர்கள் அல்லது அவருடைய உடைமைப்பொருள். ஆனால், நாம் அப்படி நினைப்பதில்லை. நாம், நம்மிடம் இருப்பது, நம்மால் முடிந்தது எல்லாம் அவருக்குச் சொந்தம். நாம் அவருடைய உடைமைப்பொருள் என்றால் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற உடல், சிந்திக்கிற மனம், தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற திறமைகள் அல்லது நமக்குரியவைகள் எல்லாம் அவருக்குரியவை. நான் அவருக்குச் சொந்தம் என்றால் எனக்குரியவைகளெல்லாம் அவருக்கே சொந்தம்.

இந்த உலகத்தில் நாம் பல பொருட்களைச் சொந்தப்படுத்தியிருக்கலாம், சம்பாதித்திருக்கலாம். தேவன் நமக்கு ஒரு குடும்பத்தைக் கொடுத்திருப்பார்; கணவன், மனைவி, பிள்ளைகளைக் கொடுத் திருப்பார். படிப்பைக் கொடுத்திருப்பார்; நம்மால் பல காரியங்களைச் செய்ய முடியும். நம்மிடம் சில ஆற்றல்கள் இருக்கும்; வேலை செய்வதற்குரிய ஆற்றல், திறமை, சாமர்த்தியம், ஞானம் இவைகள் இருக்கும். இவை எல்லாமே இப்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உரியவை.

ஒருவேளை உங்களில் சிலர், “இது எங்களுக்கு ஏற்கெனவே தெரியும்; இது ஒன்றும் புதிதல்ல,” என்று நினைக்கலாம். இது உங்களுக்கு ஏற்கெனவே தெரியும் என்றால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. ஆனால், பல சமயங்களில் தேவனுடைய மக்களுடைய வாழ்க்கையைப் பார்க்கும்போது, இந்த அடிப்படை உண்மைகூட அவர்களுக்குப் புலனாகவில்லை என்று தெரிகிறது. சில சமயங்களில் உதட் டளவில், “ஆம்! இதுதான் உண்மை!” என்று சொல்லலாம். “இயேசு கிறிஸ்து என்னை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்; எனவே, நான் எனக்குச் சொந்தமானவனல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமானவன்; நான் அவருடைய உடைமைப்பொருள,” என்று திருப்பிச் சொல்வ தற்கு நேரம் ஆகாது. ஆனால், இந்த உண்மையை அனுபவத்தில், நடைமுறையில், பார்ப்பது மிகவும் அரிதாக இருக்கிறது.

## ஒப்புக்கொடுத்தல்

“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை

வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே, நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்," என்ற ரோமர் 12ஆம் அதிகாரம் *1, 2, 3*ஆம் வசனங்களை நாம் அடிக்கடி வாசித்திருக்கிறோம். "உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்," என்று பவுல் சொல்லுகிறார்.

**பலிபீடத்தில் வைத்தல்**

இதன் பொருள் நம் உடலை மட்டும் அல்ல, நமக்குரிய எல்லாவற்றையும் ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. உண்மையான ஆரா தனை என்பது ஒரு பாடல் பாடுவது அல்ல. உண்மையான ஆராதனை என்பது நம் முழு வாழ்க்கை யையும், அந்த வாழ்க்கையிலுள்ள எல்லாவற்றையும் தேவனுக்காக நாம் அர்ப்பணிப்பதாகும். "இந்த வாழ்க்கை எனக்குச் சொந்தமானதல்ல. இது உமக்குச் சொந்தமானது," என்று அர்ப்பணிப்பதே ஆரா தனை. அர்ப்பணத்தைக் குறிக்க நாம் வேதத்திலிருந்து ஒரு வார்த்தையைப் பயன்படுத்துவதாக இருந்தால் *பலிபீடத்தில் வைப்பது* என்று சொல்லலாம். *பலிபீடத்தில் வைப்பது* என்பது ஓர் அழகான வாக்கியம். உண்மையிலேயே பலிபீடத்தில் வைப்பது என்றால், "இது எனக்குரியதல்ல, இது உமக் குரியது. இது எனக்குச் சொந்தமானதல்ல, உமக்குச் சொந்தமானது. இது என்னுடைய உடைமைப் பொருள் அல்ல, இது உம்முடைய உடைமைப்பொருள். இது என்னுடைய பெற்றோர்களுடைய உடைமைப்பொருள் அல்ல, இது உம்முடையது," என்பதாகும்.

முதலாவது, இது என்னுடைய உடைமைப்பொருள் அல்ல; இது என்னுடைய பெற்றோர்களுடைய உடைமைப்பொருளுமல்ல; என்னுடைய கணவன் அல்லது மனைவியின் உடைமைப்பொருளும் அல்ல; என்னுடைய பிள்ளைகளுடைய உடைமைப்பொருளும் அல்ல; மிக முக்கியமாக இந்த உல கத்துக்குரிய உடைமைப்பொருள் அல்ல. தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் இந்த ஞானமும், அறி வும், திறமையும், சாமர்த்தியமும் நம்முடைய உடைமைப்பொருள் அல்ல. தேவன் நமக்குக் கொடுத் திருக்கும் நேரம் அல்லது வாழ்நாள் நம்முடைய உடைமைப்பொருள் அல்ல.

இது என்னுடைய உடைமைப்பொருள் என்று நான் நினைக்கிறேன் என்று எப்படித் தெரியவரும்? என் னுடைய மனம்போல், என்னுடைய விருப்பம்போல் நான் என் நேரத்தைச் செலவழிக்கிறேன், என் னுடைய பொருட்களைச் செலவழிக்கிறேன், என்னுடைய மனதை, சிந்தனைகளை, எண்ணங்களை, செலவழிக்கிறேன் என்றால் இது இன்னும் எனக்குரியது; இது என்னுடைய உடைமைப்பொருள்தான் என்று நினைக்கிறேனேதவிர இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இன்னும் அர்ப்பணிக்கப்பட வில்லை அல்லது பலிபீடத்தில் வைக்கப்படவில்லை என்று தெரிந்துவிடும்.

**அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை ஆசீர்வாதமான வாழ்க்கை**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முற்றுமுடிய அர்ப்பணிக்கப்பட்ட, பலீபீடத்தில் வைக்கப்பட்ட வாழ்க்கையே இந்த உலகத்தில் மிகவும் பாதுகாப்பான, மிகவும் ஆசீர்வாதமான வாழ்க்கையாகும். நான் இதை மீண்டும் சொல்லுகிறேன். இந்த உலகத்திலே மிகவும் ஆசீர்வாதமான, மிகவும் பாதுகாப் பான வாழ்க்கை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட, பலிபீடத்தில் வைக்கப்பட்ட வாழ்க்கை.

தேவன் நம்முடைய வாழ்க்கையை, நம்முடைய நேரத்தை, நம்முடைய பணத்தை, நம்முடைய உழைப்பை, நம்முடைய ஆற்றலை, அறிவை, ஞானத்தை, திறமையை, சாமர்த்தியத்தை எப்படிப் பயன்படுத்த அல்லது செலவிடச் சொல்கிறாரோ, அப்படிச் செலவழிப்பதைப்போன்ற பாதுகாப்பான, ஆசீர்வாதமான வாழ்க்கை வேறொன்றும் இல்லை.

*2* தீமோத்தேயு *1:12*இல் அப்போஸ்தலனாகிய பவுல், "அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக் கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக் கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்," என்று சொல்லுகிறார்.

**அர்ப்பணிப்பதற்கான காரணங்கள்**

என்ன அடிப்படையிலே நாம் நம் வாழ்க்கையை, நமக்குரிய எல்லாவற்றையும் இயேசுவுக்கு அர்ப் பணிக்கிறோம் அல்லது பலிபீடத்தில் வைக்கிறோம்? இரண்டு அடிப்படையிலே நாம் இதைச் செய் கிறோம். ஒன்று, *அவர் நம்மை விலைகொடுத்து வாங்கியிருக்கிறார்*. எனவே, நான் விரும்பினாலும்

சரி, விரும்பாவிட்டாலும் சரி, என்னுடைய வாழ்க்கையும், எனக்குரிய எல்லாமும் இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தம்.

இரண்டாவது, *அவர் நம்பத்தக்கவர், பாதுகாப்பானவர், சார்ந்துகொள்ளத்தக்கவர், உண்மையுள்ளவர்.* ஒருவேளை என்னிடம் விலையேறப்பெற்ற ஒரு பொருள் (பொன் அல்லது வைரம்) இருக்கிறது என்றும், அதை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். என்னால் அதைப் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியாது என்று எனக்குத் தெரியும். அப்போது, நான் யாரைத் தேடுவேன்? அதைப் பத்திரமாகச் சேர்க்கிற வல்லமையுடைய, நம்பத்தக்க ஒரு நபரைத் தேடுவேன். "நான் அந்தப் பொருளைக் கொண்டுபோகும்போது வழியில் ஒருவன் என்னிடம் அதைக் கொள்ளையடித்துவிட்டுப்போய்விட்டான்," என்ற பின்புலம் உள்ளவனிடம் அந்தப் பொருளைக் கொடுத்து அனுப்பமாட்டோம். அப்போஸ்தலனாகிய பவுல் அப்படி வல்லமையும், நம்பகமுமான ஒரு நபரைக் கண்டுகொண்டார். யார் அவர்? இயேசு கிறிஸ்து. "நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று," அவர் அறிந்திருந்தார்.

பலர் தங்கள் வாழ்க்கையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலும் அர்ப்பணிக்காததற்குக் காரணம் என்ன? "என்னுடைய ஆவி, ஆத்துமா, உடல், என்னுடைய அறிவு, ஞானம், திறமை, சாமர்த்தியம், எதிர்கால வாழ்க்கை, படிப்பு, வேலை, நான் சம்பாதிக்கிற பணம், என்னுடைய நேரம், என்னுடைய மனைவி மக்கள், நண்பர்கள், இந்தப் பூமியில் நாம் பெற்றனுபவிக்கத்தக்க எல்லா நன்மைகள், இன்பங்கள் ஆகிய எல்லாவற்றையும் நான் இயேசு கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணித்தால் ஒருவேளை அவர் இவைகளையெல்லாம் இந்தப் பூமியில் மீண்டும் தராமல் போய்விடுவாரோ!" என்கிற அச்சம் மனிதர்களுடைய மனதிலே உண்டு. ஆனால், இந்த அச்சத்தைப் போக்கும்வண்ணமாகப் பவுல் சொல்லுகிறார்: அவர் கடைசிவரை அதைக் காத்துக்கொள்ளவல்லவராயிருக்கிறார்.

எந்தவொரு மகிழ்ச்சியையும் இந்த வாழ்க்கையிலே கடைசிவரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்றால் மிகப் பாதுகாப்பானது அதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பதே.

**பிரச்சினைகளுக்குத் தீர்வு-அர்ப்பணம்**

யாராவது, "என்னுடைய வாழ்க்கையில் பெரிய போராட்டம் இருக்கிறது, பிரச்சினை இருக்கிறது!" என்றால் அவர்களுடைய பிரச்சினையை எப்படித் தீர்த்துவைப்பது? என்னைப்பொறுத்தவரை முதலாவது தீர்க்கவேண்டியது பிரச்சினை அல்ல. முதலாவது நீங்கள், "ஆண்டவரே, நீர் என்னை விலைகொடுத்து வாங்கியிருக்கிறீர். நான் எனக்கு உடைமையல்ல. நான் உமக்கு உடைமை. நான் உம்முடைய சொந்தப் பொருள்," என்று ஜெபித்து உங்களை அவருக்கு அர்ப்பணம் செய்யுங்கள். ஒரு நீண்ட பட்டியலைச் சொல்லலாம். "நான், என்னுடைய ஆவி, என்னுடைய ஆத்துமா, என்னுடைய உடல், நீர் தந்த படிப்பு, அறிவு, ஞானம், வல்லமை, சாமர்த்தியம், திறமை, மனைவி, பிள்ளைகள், வேலை, பணம், சொத்து, சுதந்தரம், போக்குவரத்து, எதிர்காலம், எல்லாவற்றையும் உமக்கென்று அர்ப்பணிக்கிறேன், ஆண்டவரே," என்று தீர்க்கமாகச் சொல்லுங்கள்.

இந்த ஜெபத்தைச் சொல்ல நாம் அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். இதை உங்கள் வாழ்க்கையில் ஒரேவொரு நாள் மட்டும் அல்ல, ஒவ்வொரு நாள் காலையிலும் சொல்லுங்கள். "ஆண்டவரே, இந்த நாள் நீர் எனக்குக் கொடையாகக் கொடுத்தது. எனவே, உம் விருப்பத்தை மட்டும் நான் என் வாழ்க்கையிலே செய்ய விரும்புகிறேன். ஆண்டவரே, உம்முடைய விருப்பங்களை மட்டும் என் விருப்பங்களாக எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்," என்று சொல்லுங்கள்.

உடனே, "அப்படியானால் என்னுடைய 100 விருப்பங்கள் என்ன ஆவது?" என்ற ஒரு பயம் வரும். பிசாசு நம்முடைய இருதயத்தில் ஒரு பயத்தை விதைப்பான். "எனக்கு எவ்வளவோ விருப்பங்கள் இருக்கின்றன! அந்த விருப்பங்களையெல்லாம் இயேசு மண்ணோடு மண்ணாகப்போட்டு மூடிவிட்டால்!" என்கிற பயம் வரும். அதைக்குறித்து அஞ்சவேண்டிய அவசியம் இல்லை.

**அர்ப்பணம்-வாழ்நாள் அனுபவம்**

உங்களை உற்சாகமூட்டுவதற்காக மட்டும் நான் இந்த நிகழ்ச்சிகளை நினைப்பூட்ட விரும்புகிறேன். ஒருநாள் ஆண்டவரிடம், "ஆண்டவரே, ஒட்டுமொத்தமாக நான் இவைகளை உமக்கு அர்ப்பணிக்கிறேன்," என்று சொல்லிவிடலாம். ஆனால், இதைச் செயல்படுத்துவதற்கு, நிஜமாக்குவதற்கு, தேவன் நம் வாழ்க்கை முழுவதையும் பயன்படுத்துகிறார். இன்றைக்கு நாம் ஒன்றை அர்ப்பணிக்க ஆரம்பிப்போம். ஆனால், சாகிறவரை அல்லது கர்த்தர் வருகிறவரை பல காரியங்களை நாம் அர்ப்

பணிக்காமலே வைத்திருப்போம். பரிசுத்த ஆவியானவர் அவைகளிலே தம் விரல்களை வைப்பார். ஒரு காரியத்தை நான் உதட்டளவில் அர்ப்பணித்திருக்கிறேன். ஆனால், அதின்மேலுள்ள அதிகாரம் என்னுடைய கையில்தான் இருக்கிறது. "இதை இன்னும் உன்னுடைய விருப்பு வெறுப்புகளின்படி தான் பயன்படுத்துகிறாயேதவிர அது இன்னும் என்னுடைய விருப்பு வெறுப்புகளின் ஆளுகைக்கு வரவில்லை," என்று பரிசுத்த ஆவியானவர் அதின்மேல் கைககளை வைப்பார்.

ஏன் எல்லாவற்றின்மேலும் ஒரே நாளில் அவரால் கைகளை வைக்க முடியாதா? ஒன்று, நம்முடைய *ஆவிக்குரிய கல்வி அந்த அளவுக்குத்தான் இருக்கிறது.* இன்னொன்று, *அது ஒருவனுடைய நம்பகத் தன்மையைப் பொறுத்தது.* ஒரே நாளில் ஒருவனிடத்தில் நமக்கு நம்பகத்தன்மை வந்துவிடாது. பல காரியங்களில் சோதித்தறிந்து, பல சம்பவங்களில் பலதடவை பார்க்க வேண்டும். அதன்மூலமாக, "இந்தக் காரியத்தில் இவரை நம்பலாம்" என்ற ஒரு நம்பிக்கை-சார்ந்துகொள்கிற, பற்றிக்கொள்கிற ஒரு நம்பிக்கை-வளரும் அல்லது வளராமல் இருக்கும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வலுக்கட்டாயமாக, "உனக்குரிய எல்லாவற்றையும் பலிபீடத்தில் வைத்துவிடு," என்று சொல்வதில்லை. முதலாவது கொஞ்சம் அர்ப்பணிக்கச் சொல்லுகிறார். நாம் அர்ப்பணித்த காரியத்தில் அவர் எந்த அளவுக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதை அவர் நம்மை அனுபவிக்கச் செய்வார். அனுபவித்தபிறகு, "இப்போது உன்னால் என்னை நம்பமுடிகிறதா? நம்பமுடிகிறது. அப்படியானால், அதை அர்ப்பணி," என்று படிப்படியாக அர்ப்பணிக்கச் சொல்வார்.

எனவே, படிப்படியாக அர்ப்பணிக்கச் சொல்வதற்குக் காரணம் ஒன்று நம் ஆவிக்குரிய திறன்.

இயேசு கிறிஸ்து, யோவான் 6ஆம் அதிகாரத்தில், "அந்தத் திரளான மக்களுக்கு எப்படி உணவு கொடுக்கலாம்?" என்று கேட்கிறார். அப்போது அந்திரேயா, "இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும், அவை கள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்?" என்று சொல்லுகிறார். ஆனாலும், அந்தச் சிறுவன் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் இயேசுவிடம் கொடுக்கிறான். இது அர்ப்பணத் திற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

அவர் அதைப் பலுகிப் பெருகப்பண்ணி ஐயாயிரம்பேருக்குச் சாப்பிடக் கொடுத்து, மீதியானவை களை பன்னிரண்டு கூடைகளிலும் எடுத்தார்கள். இது இப்போது கேட்பதற்கு மிகவும் நன்றாக இருக் கும். நம்முடைய வளங்கள் மிகவும் குறைவாக இருக்கலாம். ஆனால், நாம் அதையும் தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஒருவேளை நான் அந்தச் சிறுவனாக இருந்து என்னிடமுள்ள ஐந்து அப்பங் களையும் இரண்டு மீன்களையும் யாராவது கேட்டால், கொடுக்காமல் இருப்பதற்கு நான் நூறு கார ணங்கள் சொல்வேன். "எங்க அம்மாகிட்ட ஒரு வார்த்தை கேட்டபிறகுதான் என் னால் சொல்ல முடி யும். எங்க அம்மா சமைத்துக்கொடுத்தது. எனவே. இதைக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என் பதை முடிவுசெய்வதில் அவர்களுக்கும் ஒரு பங்கு இருக்கிறது," என்று சொல்வேன். அம்மாவைக் கேட்காமல் நாம் நூறு காரியங்களைச் செய்வோம். ஆனால், அர்ப்பணம் என்று வரும்போது, "நான் எங்க அம்மாவை ஒரு வார்த்தை கேட்டபிறகுதான் பதில் சொல்ல முடியும்," என்று சொல்வோம். அம்மாவைக் கேட்பதல்ல காரியம். காரியம் நம்முடைய இருதயத்தில் இருக்கிறது. ஒருவேளை அம்மாவுக்குப் போன்பண்ணி கேட்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். போன் பண்ணும்போதே, "அம்மா வேண்டாம் என்று சொல்லிவிட மாட்டார்களா!" என்கிற ஒரு எண்ணத்தோடு நாம் போன் பண்ணலாம். எனவே, காரியம் இருதயம்!

**பலிபீடத்தில் வைத்தல்**

பலிபீடத்தில் வைக்க வேண்டும் என்று நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் அது அங்கு கொல்லப் படும், அடிக்கப்படும். எப்படி பலிபீடத்தில் வைக்கப்படுகிற ஒரு ஆடு அல்லது கடா கொல்லப்படு கிறதோ அதுபோல நாம் தேவனுக்கென்று அர்ப்பணிப்பதை அவர் நமக்கென்று பயன்படுத்த வேண் டிய அவசியம் இல்லை. அது நமக்கு இழப்பாக மாறும். தேவன் எந்த உத்தரவாதமும் கொடுத்து நம்மை அர்ப்பணிக்கச் சொல்வதில்லை. "நீ அர்ப்பணித்தால், நீ எனக்கு ஒரு ரூபாய் அர்ப்பணித் தால் நான் உனக்கு நூறு ரூபாய் திருப்பித்தருவேன்," என்கிற உத்தரவாதம் இல்லை. அப்படி யாராவது பிரசங்கம்பண்ணினால் நான் அதை ஆமோதிப்பதில்லை.

"நீங்கள் தசமபாகங்களைக் கொண்டுவாருங்கள். எனவே, மல்கியா 3:10இன்படி வானத்தின் பலகணி களைத் திறந்து இடங்கொள்ளாமற்போகுமட்டும் ஆசீர்வதிக்கமாட்டேனோ என்று என்னைச் சோதித் துப்பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" என்று யாராவது சொன்னால் நான் அதை ஆமோதிக்கமாட்டேன். அப்படியானால், எபிரேயர் 11ஆம் அதிகாரத்தில், அவர்கள் வறியவர்

களாக மரித்தார்கள், அவர்கள் வாக்குறுதிபண்ணப்பட்டதை அடையாமல் அதைத் தூரத்தில் கண்டு அணைத்துக்கொண்டு மரித்தார்கள் என்று எழுதியிருக்கிறதே அது என்ன?

கம்யூனிச நாடுகளில் தங்கள் விசுவாசத்திற்காகக் கொல்லப்படுகிற விசுவாசிகளின் காரியம் என்ன? Richard Wurmbrand என்பவர் எழுதிய *Tortured for Christ* என்ற புத்தகத்தில் நான் இப்படிப் படித்திருக்கிறேன். அவர் தம் விசுவாசத்தினிமித்தம் ரோமானிய சிறையில் சித்திரவதைக்குள்ளான போது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை அதில் விவரமாக எழுதியிருக்கிறார். சிறையில் வாரத்திற்கு ஒருமுறை ஒரு துண்டு ரொட்டி கொடுப்பார்களாம். அதை சிலர் பத்து நாட்கள் சாப்பிடாமல் வைத்திருந்து, சிறையில் மிகவும் பலவீனமான ஒரு சகோதரனுக்குக் கொடுப்பார்களாம். "நீங்கள் ஒரு துண்டு ரொட்டி கொடுத்தால் உங்களுக்கு நூறு துண்டு ரொட்டி கிடைக்கும்," என்ற வாக்குறுதியின் அடிப்படையிலா அவர்கள் அந்த ரொட்டித் துண்டைக் கொடுத்தார்கள்? இல்லை, அன்பினால் கொடுத்தார்கள். தேவனால் நூறு துண்டு ரொட்டி கொடுக்க முடியும். ஆனால், அவர் அப்படிக் கொடுக்காவிட்டாலும் அது ஒரு பொருட்டல்ல.

தேவன் ஒன்றும் நம்மைப் பட்டினியால் சாகவிடுவதில்லை. இந்த வசனத்தை நான் பலதடவை மேற்கோள்காட்டியிருக்கிறேன். "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும், நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை," (சங். 37:25) என்று தாவீது தன் சாட்சியைச் சொல்லுகிறான். இதுதான் இயல்பான நிலை. ஆனால், இந்த நிலை மாறினாலும் அது நமக்கு ஒரு பொருட்டல்ல.

எனவே, நாம் தேவனுக்கு அர்ப்பணிக்கும்போது தேவன் நமக்கு எந்த உத்தரவாதமும் தருவதில்லை. "ஆண்டவரே, என்னுடைய நேரம் உமக்குரியது. என்னுடைய பணம் உமக்குரியது. என்னுடைய படிப்பு உமக்குரியது. என்னுடைய வேலை உமக்குரியது. என்னுடைய எதிர்காலம் உமக்குரியது," என்று சொல்லும்போது, "நான் அர்ப்பணிக்கிறேன் என்று சொல்லிவிட்டதால் இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வாரா என்ன? நான் சொல்லிவிட்டேன் இல்லையா! அதனால் அவர் தொடப்பட்டு 'சரி, சரி, என்னிடம் சொல்லிவிட்டாய் அல்லவா! அதனால் நீயே எடுத்துக் கொள்' என்று சொல்லமாட்டாரா?" என்று நினைக்க வேண்டாம்.

அவர் அவையெல்லாவற்றையும் எடுத்து அவர் விருப்பம்போல் பயன்படுத்தலாம். நம் படிப்பு பெரிய விஷயம்; நம்முடைய பணம் மிகவும் பெரிய விஷயம்; நம்முடைய போக்குவரத்து ஒரு பெரிய விஷயம்; நம்முடைய சொத்து ஒரு பெரிய விஷயம்; நம்முடைய நண்பர்கள், உறவினர்கள் ஒரு பெரிய விஷயம் என்று நாம் நினைத்துக்கொள்கிறோம். அது ஒரு பெரிய விஷயம் அல்ல.

### அர்ப்பணத்திற்கு இயேசு தகுதியானவர்

நம்முடைய எல்லாவற்றையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பதற்கு அவர் பாத்திரர். திருவெளிப்பாட்டில் நாம் இப்படி வாசிக்கிறோம். "இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்குமுன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து, கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்…" என்றார்கள் (வெளி. 4:10, 11).

நாம் நம்முடைய எல்லாவற்றையும் அர்ப்பணிப்பதற்கு இந்த முழுப் பிரபஞ்சத்திலும் ஒரேவொருவர் பாத்திரர். அது நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. நமக்குரிய எல்லாவற்றையும் செலுத்தி தொழுதுகொள்ளும் அளவுக்கு அவர் பாத்திரர். ஒருவேளை நான் இன்றைக்கு எதை மிகவும் விலையேறப்பெற்றதாக, மதிப்புவாய்ந்ததாக, கருதுகிறேனோ அதை அவர், "நீ பலியாகச் செலுத்திவிடு" என்றால் அதற்கும் அவர் பாத்திரர்.

இன்னொன்றையும் என்னால் சொல்ல முடியும். இயேசு எந்த அளவுக்கு அருமையானவர், நம்பத்தக்கவர், சார்ந்துகொள்ளத்தக்கவர், பற்றிக்கொள்ளத்தக்கவர், உண்மையுள்ளவர் என்பதை நாம் எப்படிக் கண்டுபிடிக்கமுடியும்? நாம் அர்ப்பணிக்கிற அளவின்படி அவர் எந்த அளவுக்கு நம்பத்தக்கவர், சார்ந்துகொள்ளத்தக்கவர், பற்றிக்கொள்ளத்தக்கவர், உண்மையுள்ளவர் என்று நாம் கண்டுபிடிப்போம்.

"தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும் இருக்கிறீர்" (சங். 18:25). அர்ப்பணிக்கிற ஒரு மனிதனுக்கு அவர் எப்போதுமே உண்மையுள்ளவராயிருக்கிறார்.

**இயேசு நம்பத்தக்கவர்**

இயேசுவை நம்பாமல் தம்முடைய சொந்த சாமர்த்தியத்தை நம்பி வாழ்கிற மக்கள் உண்டு. யோவான் 21ஆம் அதிகாரத்தில் ஓர் அற்புதமான சம்பவம் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபிறகு நடக்கிற ஒரு சம்பவம். பேதுருவும் அவருடைய நண்பர்களும் மீன் பிடிக்கப்போகிறார்கள். (இந்த உலகத்தில் எப்படியாவது நிறைய மீன் பிடித்து, சம்பாதித்து, வாழ்க்கையில் ஒரு நிலைமைக்கு வந்துவிட வேண்டும் என்று நாம் நினைக்கிறோம்) ஆனால், அந்த இரவு முழுவதும் அவர்கள் எந்தப் பாடுபட்டும் ஒன்றும் பிடிக்கவில்லை. காலையில் கரைக்கு வரும் போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அங்கு நிற்கிறார். அவர் அவர்களைப் பார்த்து, “பிள்ளை களே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா?” என்று கேட்கிறார். அவர்கள், “ஒன்றும் இல்லை” என்று சொன்னார்கள். பிறகு அவர், “வாருங்கள். போஜனம்பண்ணுங்கள்,” என்று அழைக் கிறார். அவர்கள் வந்தபோது கடற்கரையில் ஏற்கெனவே மீன்களும் அப்பங்களும் சுட்டு வைக்கப்பட் டிருப்பதைக் கண்டார்கள். இது முழு வேதாகமத்திலும் எனக்கு மிகவும் பிடித்த ஒரு சம்பவம். நான் அடிக்கடி இதை நினைத்துப்பார்ப்பதுண்டு. அவர்கள் கொண்டுவந்த பொருளை வைத்து ஆண்டவர் அவர்களைப் போஷிக்கவில்லை.

நம்முடைய வாழ்க்கை அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை என்றால் நாம் கவலைப்பட வேண்டிய தேவை யில்லை. போத்திபாரைக்குறித்தோ, சிறைஅதிகாரியைப்பற்றியோ, பார்வோன் மன்னனைப்பற்றியோ யோசேப்பு எந்தப் புகாரும் செய்யவில்லை. அவன் வாழ்க்கை அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை. “என் வாழ்க்கை என் தேவனின் பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் இருக்கிறது,” என்று அவனுக்குத் தெரியும்.

கார்களில் Under ABT care என்று எழுதியிருப்பதைப் பார்க்கும்போது என்னை அறியாமலே “நான் என் தேவனுடைய பராமரிப்பிலே இருக்கிறேன்” என்ற எண்ணம் எழுகிறது. நாம் நம் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின் பராமரிப்பின்கீழும், பாதுகாப்பின்கீழும் வாழ்கிறோம்.

**உயிர்த்தெழுதலின் தேவன்**

“...அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன்” (ரோமர் 4:17). இயேசு கிறிஸ்து கடலில் வலை போட்டு அந்த மீன்களைப் பிடித்துக்கொண்டு வந்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை. அவர் ஒன்றுமில்லாததிலிருந்து மீன்களை உருவாக்கினார் என்றே நாம் விசுவாசிக் கிறேன். சில சமயங்களில் அவர் இவ்வாறு செய்கிறார் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் அவர் உயிர்த்தெழுதலின் தேவன். தண்ணீர் திராட்சைரசமாக மாறுவது எதைக் குறிக்கிறது? அது உயிர்த் தெழுதல். உயிர்த்தெழுதலை நம்பும்போது மட்டுமே நாம் நம்மை அர்ப்பணிப்போம்.

உயிர்த்தெழுதலை நம்பியதால்தான் ஆபிரகாமால் தன்னுடைய ஏக சுதனும், நேச குமாரனுமாகிய ஈசாக்கை அர்ப்பணிக்க முடிந்தது. ஏனென்றால், அவன் உயிர்த்தெழுதலை நம்பினான். இந்த இயற்கையான தளத்திற்கு அப்பாற்பட்டு, தேவனால் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் தரமுடி யும். பூமியின் தளத்துக்கு அப்பாற்பட்டு, அவரால் செயல்பட முடியும்.

எனவே, தேவனுடைய மக்கள் நன்மையும், ஆசீர்வாதங்களும், இளைப்பாறுதலும் நிறைந்த ஒரு வாழ்க்கை வாழவேண்டுமானால் முதல் வழி, ஒரே வழி, நம் கிறிஸ்தவ வாழ்க்கையின் தொடக்கத் திலேயே நம்முடைய வாழ்க்கையை அதனுடைய எல்லாவற்றோடும் நம் தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

**எச்சரிக்கை**

இதன் பொருள் நாம் இனிமேல் படிக்க வேண்டிய அவசியம் இல்லை, தேர்வு எழுதவேண்டிய அவ சியம் இல்லை, வேலைக்குப்போக வேண்டிய அவசியம் இல்லை என்பதல்ல. நாம் நம் வாயைத் திறந்து அன்னார்ந்து பார்த்துக்கொண்டிருந்தால் போதும், இயேசு கிறிஸ்து வந்து நம் வாயில் நமக் குச் சாப்பாடு தருவார் என்பதல்ல. நாம் அப்படிச் சொல்லவில்லை. நான் அப்படிச் சொல்லவில்லை.

“ஆண்டவரே, நீர் எங்கு வேலைசெய்யச் சொல்லுகிறீரோ நான் அங்கு வேலை செய்வேன். என்ன வேலை செய்யச் சொல்லுகிறீரோ அதை நான் செய்வேன். நான் 8 மணி நேரம் மட்டும் அல்ல, 12 மணி நேரம், 16 மணி நேரமும் வேலை செய்வதற்குத் தயார். பணம் சம்பாதிப்பதற் காக 8 மணி நேரம் செலவிடச் சொன்னால் 8 மணி நேரம் செலவிடுகிறேன். 12 மணி நேரம் செலவிடச் சொன் னால் 12 மணி நேரம் செலவிடுகிறேன். 4 மணி நேரம்தான் செலவழிக்க வேண்டும் என்றால் 4 மணி நேரம் செலவழிக்கிறேன்.” 4 மணி நேரம் மட்டுமே செலவழித்தால் நான் அதிகமாக சம்பாதிக்கமுடி யாதே! குறைவாகத்தானே சம்பாதிக்க முடியும். சரி. அது போதும்.

நம்முடைய நேரம், நம்முடைய உழைப்பு, நம்முடைய ஆற்றல், நம்முடைய சிந்தனை, மிக முக்கியமாக நம்முடைய குடும்பம், எல்லாம் கர்த்தருக்குரியவை.

நாம் ஒவ்வொருநாளும் பயத்தோடும், அச்சத்தோடும் வாழ வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறாரா? இல்லை. நாம் இப்படிப் பயத்தோடு வாழ வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை.

**ஒவ்வொரு நாளும் அர்ப்பணம்**

எனவே, அருமையான பரிசுத்தவான்களே! இதுவரை நாம் அப்படி அர்ப்பணிக்கவில்லையென்றால் இன்று நாம் அப்படி அர்ப்பணிக்க வேண்டும். அது மட்டும் அல்ல. ஒவ்வொரு நாளும் காலையில் நம்முடைய வாழ்க்கையைத் தேவனுக்கு அர்ப்பணிப்பதற்கு என்னுடைய இன்னொரு ஜெபம் உண்டு. ஒவ்வொருநாளும் வெளியே போவதற்குமுன்பாக, "ஆண்டவரே, இன்று என்னுடைய மனைவி, மக்கள், எனக்குரிய எல்லாவற்றையும் உமக்கென்று அர்ப்பணிக்கிறேன்." இதற்கு அர்த்தம், "ஆண்டவரே, உமக்கு விருப்பமில்லாத, சித்தமில்லாத, வீணான, கனியற்ற, மாயையான காரியங்களிலே என்னுடைய நேரத்தையும், உழைப்பையும், மனதையும் செலுத்த நான் விரும்பவில்லை. நீர் என்னைக் காத்துக்கொள்ளும். என்னுடைய மனைவியோ, மக்களோ, நானோ அல்லது என்னுடைய சகோதர சகோதரிகளோ இப்படி உம்முடைய சித்தத்துக்குப் புறம்பான எதிலும் ஈடுபடாதவண்ணம் நீர் காத்துக்கொள்ளும். பரிசுத்தவான்கள் எல்லாரையும் நினைவுகூரும். உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பும். உம்முடைய சித்தம் மட்டும் செய்ய நீர் நடத்துவீராக," என்பதுதான் அதன் பொருள். இது நம்முடைய ஜெபமாக இருக்க வேண்டும்.

நான் இதைப் பகிர்ந்துகொள்வதற்கு ஒரு காரணம் உண்டு. பல சகோதர சகோதரிகள் தங்கள் பாரங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது அடிப்படையில் எங்கோ பிரச்சினை இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அது என்ன பிரச்சினை. அர்ப்பணம் இல்லையோ என்று தோன்றுகிறது.

அருமையான சகோதா சகோதரிகளே! அந்த அடிப்படைப் பிரச்சினையை நாம் சரிசெய்ய வேண்டும். வாழ்க்கை, எதிர்காலம் முழுவதும் யாருக்கு உரியது?

**எங்கள் அனுபவம்**

போராட்டத்தைப் போராடி முடித்து, ஓட்டத்தை ஓடி முடித்து, நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டபிறகு மட்டுமே தேவன் நம்மை அழைப்பார். என்னுடைய மனைவி சுகவீனமாக இருந்தபோது நான் அவர்களிடம் சொன்ன வார்த்தை, "நான் உன்னைப் போகவிடாதவரை கர்த்தர் எடுக்க மாட்டார்." இப்படிச் சொல்லலாமா? பவுல் அப்படிச் சொல்லுகிறார். "நான் தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு; அப்படியிருந்தும் நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்" (பிலி. 1:23, 24). நாங்கள் மரணப் பள்ளத்தாக்கில் நடந்தோம். ஆனால், நாங்கள் செய்த ஒன்று என்னவென்றால் ஒவ்வொருநாளும் எங்கள் வாழ்க்கையை நாங்கள் தேவனுக்கு அர்ப்பணித்தோம். "வாழ்க்கை உம்முடையது ஆண்டவரே, நீர் 50 வருடம் தந்தாலும் சரி, 80 வருடம் தந்தாலும் சரி, அது உம்மைப் பொறுத்தது."

இந்த வார்த்தைகள் நாம் இந்தப் பூமியிலே வாழ்வதற்குரிய துணிவைத் தர வேண்டும். நாம் அஞ்சி நடுங்கி இந்தப் பூமியில் வாழ்வதில்லை. "வேலைபோய்விடுமோ? நோய் வந்துவிடுமோ! செத்துப் போய்விடுவேனோ! ஏழையாகிவிடுவேனோ! என் பிள்ளைகளெல்லாம் ஏழையாகிவிடுவார்களோ!" என்று பயந்து நடுங்கி வாழ வேண்டிய அவசியம் இல்லை.

கர்த்தருக்கு உங்கள் அர்ப்பணம் முற்றுமுடிய இருக்க வேண்டும். கர்த்தர் மாறுவதேயில்லை. நம்முடைய வாழ்க்கை முற்றிலுமாகத் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையாக இருக்க வேண்டும். நாம் எதைப்பற்றியும் அஞ்சியோ, சந்தேகப்பட்டோ, நடுங்கியோ வாழ வேண்டிய அவசியம் இல்லை. நம் கர்த்தர் யெஹோவா யீரே. இது ஆபிரகாமுடைய வார்த்தை. நான் பலிகொடுக்கிறேன். பலி கொடுத்தால் உனக்கு எப்படி கிடைக்கும்? தேவன் பார்த்துக்கொள்வார். தேவன் பார்த்துக்கொள்வார் என்று சொல்லிவிட்டு, இரவெல்லாம் படுத்துத் தூங்காமல் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவன் பார்த்துக்கொள்வார் என்று சொல்லிவிட்டு நிம்மதியாகப் படுத்து உறங்கலாம். கர்த்தருக்குப் பிரியமானவர்கள் தூங்கிக்கொண்டிருக்கும்போதே தேவன் அவர்களுடைய தேவையைச் சந்திக்கிறார். அவர்களுக்கு என்ன தேவையோ அதைக் கர்த்தர் வழங்குகிறார். இந்த வார்த்தைகளால் தேவன் நம் வாழ்க்கையை அவருக்கென்று அர்ப்பணிப்பதற்கு நம்மை உற்சாகப்படுத்துவாராக. ஆமென்.